**செய்தி வெளியீடு எண்: 164** **நாள்: 05.03.2018**

## செய்தி வெளியீடு

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் சாய மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுநீர் காவிரி ஆற்றில் கலந்து காவிரி ஆறு மாசுபட்டு குடிநீர் ஆதாரங்கள் பாதிக்கப்படுவதாக வெளியான செய்தி குறித்த அறிக்கை.

ஈரோடு காவிரி ஆற்றில் சம்பந்தப்பட்ட பகுதிகள் 16.02.2018 அன்று ஆய்வு செய்யப்பட்டது. மேட்டூரிலிருந்து குடிநீருக்காக 500 கன அடி மட்டுமே திறந்து விடப்படுவதால் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து குறைவாகவே இருந்தது. காவிரி ஆற்றின் தண்ணீரில் மொத்த கரைந்துள்ள உப்புகளின் (Total Dissolved Solids) அளவு 360 மி.கி/லிட்டர் ஆக இருந்தது. எனவே, சாய மற்றும் தோல் தொழிற்சாலைக் கழிவுநீர் காவிரி ஆற்றில் கலக்கப்படவில்லை.

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியிலிருந்து காவிரி ஆற்றிற்கு அன்றாடக்கழிவுநீர் வெளியேறும் ஓடைகளில் (சுண்ணாம்பு ஓடை, பிச்சைக்காரன் பள்ளம், பெரும்பள்ளம், நொச்சிப்பள்ளம்) எந்தவித சாய மற்றும் தோல் தொழிற்சாலைக் கழிவுநீர் வெளியேற்றம் இல்லை.

ஈரோடு மாவட்டத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் மற்றும் நீர்நிலைகள் மாசுபடாமல் தடுப்பதற்கும், ஈரோடு பகுதியில் இயங்கிவரும் தொழிற்சாலைகள் வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல்/பறக்கும் படை பொறியாளர்களால் தனியாகவோ அல்லது உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவுடனோ பகல் இரவு நேரங்களில் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. நீர் நிலைகளில் விதிகளை மீறி தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றும் சாய மற்றும் தோல் தொழிற்சாலைகளின் மீது மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவால் அவ்வப்போதே கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**